## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 67/2012

Deposition of **PW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr.III Bench Clerk of this court, on 05.03.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ராஜேந்திரன் Father's Name :

துவக்க நேரம்: 01.05 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

1. பிரதிவாதி எனக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்த அ.வ.எண்.102/2012-ன் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் சொத்து விவரத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் 5 அயிட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது. மேற்படி 5 அயிட்ட சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்றால் ச.எண்.272/1 மற்றும் ச.எண்.274/1 முதல் 274/5 வரை உள்ள சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. நான் தாக்கல் செய்த வழக்கில் ஓடையின் கிழபுறம் உள்ள நிலங்களுக்காக பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி அவரது வழக்கில் ஆத்தூரிலிருந்து கருமந்துறை செல்லும் தார் ரோட்டிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் பாதை தொடர்பாக பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான் ஆனால் அதுபோல் அங்கு தடம் எதுவும் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் பரம்-பரம்பரையாக மேற்படி தடம் பாதை உள்ளது என்றால் சரியல்ல.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.67/2012, Dt.05.03.2026.

3. மெயின் ரோட்டிலிருந்து பிரதிவாதியின் வீடு வரை செல்லும் பரம்பரையாக உள்ள தடத்தினை நான் மறுப்பதால்தான் ஓடையின் கிழபுறம் உள்ள அவரது நிலத்தின் தடம் இருப்பதை அவர் மறுத்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் நான் உரிமை கோரும் தடம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

4. கடந்த 27.03.2012 முதல் 08.04.2012-ஆகிய தேதிகளில் பிரதிவாதி பரம்பரையாக பயன்படுத்தி வந்த தடம், மற்ற சொத்துக்களில் அவரது அனுபவத்தை நான் தடுத்ததால்தான் பிரதிவாதி அ.வ.எண்.102/2012 தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல, அது பொய்யான வழக்கு. பிரதிவாதி பயன்படுத்திவரும் பாதையை தடுத்தால் அவரது சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் அவ்வாறு செயல்பட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி தடம் தொடர்பாக ஊரில் பேசப்பட்ட பஞ்சாயத்துக்கு நான் கட்டுப்படாததால் பிரதிவாதி வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்த வழக்கு அ.வ.எண்.67/2012-ல் எவ்விதமான உண்மையும், நியாமும் இல்லை என்பதால் அந்த வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றாலும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. அதேபோல் பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.102/2012 நியாமும், உண்மையும் கொண்டதாலும் அந்த வழக்கு பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>வாதி தரப்பு மறு விசாரணை</u>

1. நான் தாக்கல் செய்த வழக்கில் எனது மூத்த சகோதரி மலர்கொடி தரப்பினராக ஏன் சேர்க்கவில்லை என்றால் அவருக்கு தேவையான சீர்வரிசை கொடுத்து திருமணம் செய்து கொடுத்து விட்டோம். மேலும் அவர் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று கூறிவிட்டார். அதனால் அவரை இந்த வழக்கில் சேர்க்கவில்லை.

2. நான் எனது தாவா சொத்து விவரத்தில் நான்கு எல்லைகள் பற்றி ஏன் குறிப்பிடப்படவில்லை என்றால் தாவா சொத்திற்கு அருகில் சொத்தானது எனக்கும், பிரதிவாதிக்கும் சேர்ந்து பாத்தியப்பட்டது என்பதால் நான்கு எல்லைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்தில் உள்ள பொதுகிணற்றின் நான் தண்ணீர் எடுக்காதது குறித்து ஏன் கூறவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் பிரதிவாதி தண்ணீர் எடுக்கக்கூடாது என்று என்னை தடுத்தார், அதனால் நான் தண்ணீர் எடுக்கவில்லை.

(மேற்கண்ட மறுவிசாரணையை சட்டப்படி அனுமதிக்க இயலாது என்று பதிவு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது)

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1. எங்களுக்குள் பாகப்பிரிவினை எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் கடந்த 1997-ல் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் எனது சகோதரி மலர்கொடிக்கு தேவையான சீர்வரிசையை கொடுக்கப்பட்டதால் அவருக்கு பாகம் இல்லை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டபோது அவரிடம் கேட்டோம், அவர் வேண்டாம் என்ற கூறியதன் அடிப்படையில்தான் அவருக்கு பாகம் ஒதுக்கப்படவில்லை. மேற்படி சங்கதிகள்பற்றி பாகப்பிரிவினை ஆவணத்திலும், எனது வழக்குரையிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தவறானது என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 01.38 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.67/2012, Dt.05.03.2026.